# ஒதுக்கீட்டுத் தலைப்பு – 122 வெகுசன ஊடக, தகவல் அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2012 ஆம் ஆண்டு

இவ்வறிக்கை இரு பகுதிகளால் ஆனவை

I ஆம் பகுதி – அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களது கணக்குகள் தொடர்பான பொழிப்பறிக்கை

II ஆம் பகுதி – ஒவ்வொரு ஒதுக்கீட்டுத் தலைப்பிற்குமுரிய விரிவான அறிக்கை

## I ஆம் பகுதி

**வெகுசன ஊடக, தகவல் அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்கனங்களது கணக்குகள் தொடர்பான பொழிப்பறிக்கை.**

### 1. அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள்

| செலவினத் தலைப்பு | திணைக்களத்தின் பெயர் |
|---|---|
| 210 | தகவல் திணைக்களம் |
| 211 | அரசாங்க அச்சாளர் திணைக்களம் |

### 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

**மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

அமைச்சிற்கும் அமைச்சின் கீழுள்ள 2 திணைக்களங்களுக்குமென ஏற்பாடு செய்யப்பட்ட மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 2,395,400,000 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டு முடிவில் அதில் ரூபா 2,082,637,377 செலவிடப்பட்டிருந்தது. அதற்கமைய, அமைச்சினதும் திணைக்களங்களதும் ஏற்பாட்டில் தேறிய சேமிப்பு ரூபா 23,730,565 இற்கும் ரூபா 166,053,369 இற்குமிடைப்பட்ட வீச்சில் அல்லது மொத்த தேறிய ஏற்பாட்டின் 12.94 சதவீதத்திற்கும் 10.51 சதவீதத்திற்கும் இடையேயான வீச்சில் அமைந்திருந்தது. விபரம் கீழே காணப்படுகின்றது.

| ஒதுக்கீட்டுத் தலைப்பு | அமைச்சு/ திணைக்களம் | நிகர நிதியேற்பாடு | | பயன்பாடு | | சேமிப்பு | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மீண்டுவருவன | மூலதனம் | மீண்டுவருவன | மூலதனம் | மீண்டுவருவன | மூலதனம் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 122 | வெகுசன ஊடக, தகவல் அமைச்சு | 352,870,000 | 280,700,000 | 345,066,813 | 165,524,498 | 7,803,187 | 115,175,502 |
| 210 | அரசாங்க தகவல் திணைக்களம் | 158,990,000 | 24,350,000 | 144,860,283 | 14,749,152 | 14,129,717 | 9,600,848 |
| 211 | அரசாங்க அச்சாளர் திணைக்களம் | 1,421,740,000 | 156,750,000 | 1,357,880,919 | 54,555,712 | 63,859,081 | 102,194,288 |
| | மொத்தம் | 1,933,600,000 | 461,800,000 | 1,847,808,015 | 234,829,362 | 85,791,985 | 226,970,638 |

## 2.2 வருமானக் கணக்கு

### (அ) மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்

அரசாங்க அச்சாளர் திணைக்களத்தால் 2012 ஆம் ஆண்டில் வருமானக் குறியீடு 01 தொடர்பாக ரூபா 345,757,440 தொகையான வருமானம் மதிப்பிடப்பட்டதுடன் ரூபா 308,218,041 தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காணப்படுகின்றது.

| வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் | வருமானக் குறியீடு | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | குறைவாகச் சேகரித்தல் | சதவீதம் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | % |
| அரசாங்க அச்சாளர் | 2003-2-5 | 345,757,440 | 308,218,041 | 37,539,399 | 11 |

## 2.3 முற்பணக் கணக்கு

### 2.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

#### (அ) பாராளுமன்றம் விதித்த எல்லைகள்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழான 2 திணைக்களங்களின் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றம் விதித்த பின்வரும் எல்லைகள் கடைப்பிடிக்கப்பட்டிருந்தன.

| தலைப்பு | விடய இலக்கம் | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஆகக்கூடிய எல்லை | உள்ளபடியானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானவை | ஆகக்கூடிய எல்லை | உள்ளபடியானவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 122 | 12201 | 7,000,000 | 6,617,764 | 3,600,000 | 4,505,417 | 30,000,000 | 16,812,005 |
| 210 | 21001 | 8,000,000 | 5,186,330 | 5,200,000 | 6,368,862 | 45,000,000 | 26,908,229 |
| 211 | 21101 | 77,000,000 | 40,569,981 | 38,000,000 | 56,992,870 | 300,000,000 | 237,048,076 |

## 2.4 கட்டுநிதி மற்றும் பொது வைப்புக் கணக்குகள்

#### (அ) கட்டுநிதிக் கணக்குகள்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழான 2 திணைக்களங்கள் என்பவற்றின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கட்டுநிதிக் கணக்குகளில் ரூபா 24,502,985 வரவு மீதியிருந்தது. விபரம் கீழே காணப்படுகின்றது

.

| அமைச்சு/ திணைக்களம் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வரவு மீதி |
|---|---|
| | ரூபா |
| வெகுசன ஊடக தகவல் அமைச்சு | 213,546 |
| அரசாங்க தகவல் திணைக்களம் | 292 |
| அரசாங்க அச்சாளர் திணைக்களம் | 24,289,147 |
| | 24,502,985 |

**(ஆ) பொது வைப்புக் கணக்குகள்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 2 திணைக்களங்களது பொது வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 143,773,262 ஆக இருந்ததுடன் அது தொடர்பான விபரம் கீழே காணப்படுகின்றது.

| அமைச்சு/ திணைக்களம் | கணக்கு இலக்கம் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| வெகுசன ஊடக, தகவல் அமைச்சு | 6000/0000/00/0015/0035 | 72,186,938 |
| அரசாங்க தகவல் திணைக்களம் | 6000/0000/00/0011/0580 | 9,264,399 |
| | 6000/0000/00/0015/0092 | 21,734,357 |
| அரசாங்க அச்சாளர் திணைக்களம் | 6000/0000/00/0015/0192 | 40,587,568 |
| | | 143,773,262 |

# II ஆம் பகுதி

## ஒவ்வொரு ஒதுக்கீட்டுத் தலைப்புக்குமான விரிவான அறிக்கை

## 1. ஒதுக்கீட்டுத் தலைப்பு 122 – வெகுசன ஊடக, தகவல் அமைச்சு

### 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

வெகுசன ஊடக தகவல் அமைச்சின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2013 செப்தெம்பர் 02 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

### 1.2 கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத்

தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல் அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 1.3 கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் வெகுசன ஊடக, தகவல் அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இங்கே (அ) இலிருந்து (இ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 1.4 இலிருந்து 1.14 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) பாதீட்டு முரண்கள்

(i) 02 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்திருந்த ரூபா 33,400,000 மொத்த தேறிய நிதியேற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 04 செலவின விடயங்களுக்கு மிகை நிதியேற்பாடு செய்யப்பட்டமையின் காரணமாக நிதியேற்பாட்டை பயன்படுத்தியதன் பின்னர் உள்ள சேமிப்பு அச் செலவின விடயத்திற்குரிய தேறிய நிதியேற்பாட்டில் 23 இற்கும் 82 இற்கும் இடைப்பட்ட சதவீதத்தில் நிலவியது.

### (ஆ) பொது வைப்புக் கணக்கு

(i) 02 வருடங்களை விஞ்சிய ரூபா 230,622 தொகையான வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2012 ஆம் ஆண்டிற்காக இறக்குமதி செய்யப்பட்ட தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்காக அறவிடப்பட்ட மொத்த வரி வருமானம் ரூபா 81,999,587 ஆக இருந்ததுடன் அதில் ரூபா

69,879,747 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் முதலீடு செய்யப்படாமல் பொது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது.

**(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்றுக்கள்**

**கடன் நிலுவை மீதி**

சமர்ப்பிக்கப்பட்ட கணக்கின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வேலையிலிருந்து நீங்கியமை காரணமாக 4 ஆண்டுகளாக அறவீடு நிலுவையாக இருந்த ரூபா 62,588 மீதி மற்றும் 5 ஆண்டுகளைக் கடந்து விட்ட ரூபா 7,907 மீதி என்பன அவதானிக்கப்பட்டன. இதில் ரூபா 62,588 தொகை அறவிடப்படுவது தொடர்பாக வழக்குத் தொடர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் எஞ்சிய தொகை பிணையாளர்களிடமிருந்து அறவிடப்பட்டு வருகின்றது.

## 1.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 1.4.1 கூட்டிணைந்த திட்டம்

சகல அமைச்சுகளினதும் செயலாளர்கள், மாகாணசபைகளின் பிரதான செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்கள் என்போருக்கு விலாசமிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச பொது நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் ஆகக் குறைந்தது தொடர்ந்து வரும் 03 வருடங்களுக்கான கூட்டிணைந்த திட்டம் அமைச்சினால் ஆண்டின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத் திட்டமானது 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.4.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

மேலே 1.4.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட அரச பொது நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்திற்கு இணங்க 2010 இற்கும் இதற்குப் பின்னரும் அமைச்சின் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் கூட்டிணைந்த

திட்டமின்றி மீளாய்வாண்டிற்கான வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டு 2013 மே 14 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 1.4.3 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய வரவு, செலவுத் திட்டச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த கொள்வனவுத் திட்டம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.4.4 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2013 யூலை 23 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சின் 2012 இன் வருடாந்த செயலாற்றல் அறிக்கையைப் பரீட்சித்த போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ரண்மிஹிதென்ன தேசிய தொலைக்காட்சி சினிமா பூங்காவின் மூலம் 2012 இன் திரைப்பட கைத்தொழிலுக்காக வசதிகளை வழங்குதலின் மூலம் உழைக்கப்பட்ட வருமானம் அல்லது அதனைப் பராமரிப்பதற்கு ஏற்பட்ட செலவினங்கள் அதன் செயல்முன்னேற்றம் என்பன செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இறக்குமதி செய்யப்பட்டு ஒளிபரப்பப்படுகின்ற தொலைக்காட்சி நடாகங்கள், திரைப்படங்கள் மற்றும் வணிக ரீதியான நிகழ்ச்சிகளுக்காக வரி அறவிடுதல் அமைச்சின் பிரதான செயற்பாடாக இருந்த போதிலும் அதில் கிடைத்த வரி வருமானம், வரி அறவிடப்பட்ட நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை, தடை செய்யப்பட்ட நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை போன்றனவும் அதன் செயலாற்றல்களும் செயலாற்றல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

### 1.4.5 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினை அமுல்படுத்துதல்

2012 ஆம் ஆண்டிற்காக அமைச்சு மட்டத்தில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள், செயல்முன்னேற்றம் மீளாய்வுக் கூட்டங்களுடன் ஒன்றிணைந்த வகையில் அமைச்சின் கீழ் காணப்படுகின்ற 12 நிறுவனங்களினால் 08 நிறுவனங்களுக்காக 02 கூட்டங்கள் வீதமும், 04 நிறுவனங்களுக்காக ஒரு கூட்டம் வீதமும் நடாத்தப்பட்டிருந்தது.

## 1.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### (அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நி.பி 754 இன் பிரகாரம் ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் உரிய நியமங்களின் பிரகாரம் பொருட் பதிவேடு சமப்படுத்தப்பட்டு வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்தும் போது மெய்மையாய்வுச் சபை உத்தியோகத்தர்களினால் உரிய பதிவேடு பரீட்சிக்கப்பட்டு புத்தகங்களின் பிரகாரம் மீதிகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்திக் கொள்ளப்படுதலோ அல்லது காணப்படுகின்ற பொருட் பதிவேட்டினை பரீட்சிக்கப்பட்டமைக்கான உறுதிப்படுத்தலோ அமைச்சு மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனம் போன்ற இரண்டு நிறுவனங்களிலும் இடம்பெற்றிருக்கவில்லை.

(ii) தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தை 2011 ஆம் ஆண்டில் வெகுசன ஊடக அமைச்சின் கீழ் தாபிக்கப்படுகையில் இலங்கை மன்றத்தின் கீழ் 19 பிரிவிற்குரியதாக நிலையான சொத்தாக பதிவேட்டிற்கு கொண்டுவரப்பட வேண்டியதாகக் காணப்பட்ட 451 சொத்து வகைகளின் கையளித்தல் மேற்கொள்ளப் படாதிருந்ததுடன் அவைகள் சரியாக இனங்காணப்பட்டு பதிவேடுகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்க வில்லை.

### (ஆ) வெளித்தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்

1999 பெப்ரவரி 26 ஆந் திகதிய 2/99 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக 2007 தொடக்கம் 2012 ஆம் ஆண்டிற்கிடையே பதவியணியினருக்கு வழங்கப்பட்ட 23 கையடக்கத் தொலைபேசிகள் மீளக் கையளிக்கப்பட்டிராததுடன் அதில் 08 தொலைபேசிகள் ஏனைய அமைச்சிற்கும் நிறுவனங்களுக்கும் கையளிக்கப்பட்டிருந்ததுடன் அதில் 05 இனை கையேற்கப்பட்டமைக்கான உறுதிப்படுத்தும் ஆவணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.

**(இ) பெறவேண்டிய மீதி**

2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 03 தொலைக்காட்சி அலைவரிசைகளுக்காக 03 வருடங்களை விஞ்சிய ரூபா 20,414,445 தொகையான நிலுவை வரி வருமானம் அறவிட வேண்டியிருந்தது. இந்த நிலுவை வரி வருமானத்திற்காக 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அறவிடவேண்டிய மிகைக் கட்டணம் ரூபா 9,260,309 ஆக இருந்தது.

இதில் ஒரு அலைவரிசையின் நிலுவைப் பணம் ரூபா 2,850,000 தொகை 2013 ஆம் ஆண்டின் போது அறவிடப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய மிகைக் கட்டணமான ரூபா 2,451,000 தொகை 2013 நவம்பர் வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**1.6 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| சுனாதிபதி செயலகத்தின் சுற்றுநிருபம் | |
| 2010 மே 14 ஆந் திகதிய சீஏ/1/17/1 ஆம் இலக்க அரசாங்க செலவின முகாமைத்துவ சுற்றுநிருபத்தின் 3:1 ஆம் பந்தி | அமைச்சரின் பயன்பாட்டிற்கும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கும் ஒதுக்கக்கூடிய ஆகக் கூடிய 03 உத்தியோகபூர்வ வாகனங்களுக்குப் பதிலாக 07 வாகனங்கள் வழங்கப்பட்டிருந்தன. |

## 1.7 செயற்திட்டங்களை அமுல்படுத்துவதிலுள்ள பலவீனங்கள்

ரண் மிஹிதென்ன தேசிய தொலைக்காட்சி சினிமா பூங்கா மற்றும் அதனைச் சூழவுள்ள அபிவிருத்தி தொடர்பான விவரண நிகழ்ச்சித்திட்டத்தைத் தயாரிப்பதற்காக 2012 ஏப்ரல் 19 ஆந் திகதி வெளி நிறுவனமொன்றுடன் ரூபா 2,530,000 தொகைக்கு கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் 2012 மே 10 இற்கு முன்னர் 1000 டீவீடி பிரதிகள் அமைச்சிற்கு வழங்கப்பட வேண்டியிருந்தது. அதற்காக 2012 ஏப்ரல் மாதத்தின் போது 20 சதவீத அல்லது ரூபா 506,000 முற்பணத்தொகை செலுத்தப்பட்டிருந்தது. செயற்பாட்டை நிறைவேற்றாமையினால் 2013 சனவரி 17 ஆந் திகதி அதாவது 09 மாதங்களின் பின்னர் அப் பணம் அறவிடப்பட்டிருந்ததுடன் அந்த செயற்திட்டம் 2013 ஆகஸ்ட் 16 வரையிலும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

## 1.8 செயலாற்றல்

2012 இன் வருடாந்த மதிப்பீடு மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அமைச்சின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### (அ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான செயற்பாடுகள்

(i) ரண் மிஹிதென்ன தேசிய தொலைக்காட்சி சினிமா பூங்காவில் படப்பிடிப்பிற்காக பங்குபற்றுவர்களுக்கு அறை வசதிகளை வழங்குவதற்கு மூன்று அறை வகைகளின் கீழ் 43 அறைகள் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அவற்றின் பயன்பாடு 3 சதவீதம், 7 சதவீம் மற்றும் 13 சதவீதமாக ஆகக் குறைந்த நிலையில் காணப்பட்டது.

மேலும் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நாடகம் என்பவற்றுக்காக கலையரங்கம் ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும் 2012 ஆம் ஆண்டின் போது அதன் மூலம் எந்த வருமானமும் உழைக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) இலங்கையர்களின் பண்பாடுகளுடன் பொருந்தும் வகையில் தரமான தன்மையைப் பாதுகாக்கும் வகையிலான திரைப்படங்கள் தொலைக்காட்சி நாடகங்களின் ஒளிபரப்பிற்காக 2006 இன் 11 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 6(1) ஆம் பிரிவிற்கு

இணங்க வரிவிடுதலை செய்யக்கூடியதாக இருந்ததுடன் 2012 ஆம் ஆண்டின் போது ஒளிபரப்பப்பட்ட இறக்குமதி செய்யப்பட்ட 1462 தொலைக்காட்சி நாடகங்கள் மற்றும் திரைப்படங்களில் 610 இற்கு அவ்வாறு வரி விடுதலை செய்யப்பட்டிருந்தது.

**ஆ) திட்டமிடல்**

**வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க செயற்படாமை**

ரன்மிஹிதன்ன தேசிய தொலைக்காட்சி சினிமா பூங்காவிற்காக தனியான அதிகாரச்சட்டமொன்றை ஸ்தாபிப்பதற்கு 2012 இன் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் கீழ் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2013 யூலை மாதம் வரையிலும் அதிகாரச்சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

## 1.9 வங்கிக் கணக்குகளைச் செயற்படுத்துவதிலுள்ள குறைபாடுகள்

**சீராக்கப்பட வேண்டிய மீதிகள்**

வெகுசன ஊடக, தகவல் அமைச்சினால் 2012 திசெம்பர் மாதத்திற்கெனத் தயாரிக்கப்பட்ட கணக்கிணக்கக் கூற்றுக்களில் காணப்பட்ட சீராக்கல் தொடர்பான பகுப்பாய்வின் பிரகாரம் புலனாகிய தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| | சீராக்கல் தொடர்பான விபரம் | காலப்பகுப்பாய்வு<br>6 மாதங்களுக்கு மேற்பட்டதும் 1 ஆண்டிற்குக் குறைவானதும் | காலப்பகுப்பாய்வு<br>1 ஆண்டிற்கு மேற்பட்டதும் 3 ஆண்டுகளுக்குக் குறைவானதும் | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | தேறாத வைப்புக்கள் | 160,977 | 34,625 | 195,602 |
| (ii) | வழங்கப்பட்டு, கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாதிருக்கும் காசோலைகள் | 150,273 | - | 150,273 |
| (iii) | இனங்காணப்படாத வரவுகள் | 135 | 20 | 155 |
| (iv) | இனங்காணப்படாத செலவுகள் | 4,217 | 12,809 | 17,026 |

## 1.10 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

அமைச்சு மேற்கொண்ட சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய தன்மையைக் கொண்டிருந்தன. தெரிவுச் செவ்வையின்போது அவ்வாறாகப் புலனாகிய சில கொடுக்கல் வாங்கல்களது விபரம் கீழே காணப்படுகின்றன.

(அ) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் தனியார் அலைவரிசையை ஆரம்பிப்பதற்காக விண்ணப்பித்த சகலருக்கும் விண்ணப்பப்படிவம் விநியோகிக்கப்படாமையினால் சுயாதீனமாக தனியாருக்கு அல்லது நிறுவனத்திற்கு அனுமதிப்பத்திரத்திற்காக விண்ணப்பிக்கும் உரித்து மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. இருந்த போதிலும் தொலைக்காட்சி மற்றும் ஒலிபரப்புக் கூட்டுத்தானத்தின் அதிகாரச்சட்டங்களில் காணப்படுகின்ற ஏற்பாடுகளின் பிரகாரம் அந்த கூட்டுத்தாபனத்தின் இணக்கப்பாட்டினை விசாரித்தறியாது 8 சந்தர்ப்பங்களில் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன. அதற்கு மேலதிகமாக 2010 செப்தெம்பர் 03 ஆந் திகதிய 1669/25 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் 4 ஆம் பந்தியின் பிரகாரம் கேபள் தொலைக்காட்சி அல்லது இணையத்தள அடிப்படையிலான தொலைக்காட்சி நிலையத்தைப் பேணுவதற்காக இலங்கை தொலைத் தொடர்பு ஒழுங்கமைத்தல் அதிகாரச்சட்டத்தின் 17 ஆவது பிரிவின் கீழ் அனுமதிப்பத்திரம் பெறப்பட்டமைக்கான உறுதிப்படுத்தல் பெற்றுக் கொள்ளப்படாது 3 அனுமதிப்பத்திரங்கள் 2012 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்தன.

(ஆ) 2010 ஒக்டோபர் 01 ஆந் திகதி தொடக்கம் பௌத்த ஆலோசனைச் சபை ஒருங்கிணைப்பாளர் பதவிக்காக பிக்கு ஒருவர் நியமிக்கப்பட்டிருந்ததுடன் நியமனம் எக்காலம் வரை எனக் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. இந்த நியமனத்திற்காக அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. மேலும் ஒதுக்கப்பட்டு வழங்கப்பட்ட கப் வாகனத்திற்காக 2012 ஆம் ஆண்டிற்கான எரிபொருளுக்காக ரூபா 167,160 தொகையும், பழுதுபார்த்தல் செலவினத்திற்காக ரூபா 758,073 தொகையும் அமைச்சினால் செலவிடப்பட்டிருந்தது.

(இ) தனியார் கம்பனியொன்றிலிருந்து வாடகை அடிப்படையில் பெறப்பட்ட டிபென்டர் ஜீப் வண்டியின் உடன்படிக்கைக் காலம் 2011 யூன் 27 ஆந் திகதி முடிவடைந்திருந்த போதிலும் 2011 ஒக்தோபர் மாதம் தொடக்கம் 2012 திசெம்பர் மாதம் வரை பழுதுபார்த்தலுக்காக ரூபா 289,970

தொகை செலவிடப்பட்டிருந்தது. இந்த மோட்டார் வாகனம் 2013 ஆகஸ்ட் 17 வரையிலும் அமைச்சினால் பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருந்தது.

(ஈ) 2011 ஆம் ஆண்டின் போது அவசரமாகக் கொள்வனவு செய்வதற்காக கேள்விச் சபையின் மேவுகை அங்கீகாரத்தின் கீழ் ரூபா 30,154,000 பெறுமதியான 500 கணனிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் 2013 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் மாதம் வரையிலும் உரிய பிரகாரம் பகிர்ந்தளிக்கப்படாத 179 கணனிகள் நிறுவனத்தில் எஞ்சியிருந்தன.

## 1.11 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

அமைச்சு மேற்கொண்ட சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றதாக இருந்தன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சந்தர்ப்பங்களில் சில கீழே காண்பிக்கப்படுகின்றன.

### அதிகாரமின்றிய கொடுக்கல் வாங்கல்கள்

(அ) அரசாங்க செலவின முகாமைத்துவம் தொடர்பான 2010 மே 14 ஆந் திகதிய சீஎப்/1/17/1 ஆம் இலக்க சனாதிபதி செயலக சுற்றுநிருபத்தின் 5.3 இன் பிரகாரம் அமைச்சரின் அல்லது பிரதி அமைச்சரின் மாதாந்த தொலைபேசிக் கட்டணத்திற்கான கொடுப்பனவு உத்தியோகபூர்வ வதிவிடத் தொலைபேசி மற்றும் கையடக்கத் தொலைபேசிகளுக்காக ரூபா 10,000 படி அதாவது ஆண்டிற்கு ரூபா 240,000 வரை மட்டுப்படுத்தப்பட்டிருந்த போதிலும் அந்த எல்லையினை விஞ்சி 2012 ஆம் ஆண்டின் போது அமைச்சரின் உத்தியோகபூர்வ வதிவிடத் தொலைபேசி மற்றும் கையடக்கத் தொலைபேசிகளுக்காக ரூபா 616,755 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2012 ஆம் ஆண்டின் போது அமைச்சின் கீழ் உள்ள 2 அரச கூட்டுத்தாபனத்தின் 17 ஊழியர்கள் அமைச்சிற்கு நியமிக்கப்பட்டு அமைச்சரின் செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அதற்காக அரசாங்க வெளியீட்டுப் பணியகக் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 3,070,461 தொகையும் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தானத்திற்கு ரூபா 3,743,720 தொகையும் செலவிடப்பட்டிருந்தது. இந்த ஊழியர்கள் நிறைவேற்றிய செயற்பாடுகள் மற்றும் சேவையாற்றிய இடங்கள்

குறிப்பிடப்படாதிருந்ததுடன் அவர்களின் வரவுகளைக் குறித்து வைத்தலும் இடம்பெற்றிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது கௌரவ அமைச்சரின் மின்சாரப் பட்டியலுக்காக ரூபா 1,643,167 கூட்டுத்தொகையானது செலுத்தப்பட்டிருந்ததுடன் மாதாந்த மின்சாரப் பட்டியல் ரூபா 76,162 தொடக்கம் ரூபா 177,581 வரையிலான வீச்சில் காணப்பட்டது.

## 1.12 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட முறையற்ற வகையில் மேற்கொள்ளப்பட்டிருந்த கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

ரண்மிஹிதென்ன தேசிய தொலைக்காட்சி சினிமா பூங்காவின் வாயிலின் பாதுகாப்பு செயற்பாடுகள், நுழைவுச் சீட்டுக்களை விநியோகித்தல் போன்ற செயற்பாடுகளுக்காக கடற்படை உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அவ்வாறிக்கும் போது பாதுகாப்பு செயற்பாடுகளுக்காக தனியார் றிறுவனமொன்றிற்கு 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 2,658,437 தொகை செலுத்தப்பட்டு 18 பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். தொலைக்காட்சி சினிமா கிராமத்தின் வருமானத்தை விஞ்சி செலவினங்கள் ஏற்படுவதற்கு இவ்வாறான பயனற்ற செலவினங்கள் காரணமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 1.13 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வங்கியிலிடப்பட்ட ரண் மிஹிதென்ன நுழைவுச்சீட்டு வருமானத்தின் சரியான தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு அதற்கு ஒப்படைக்கப்பட்ட டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள் மற்றும் விற்கப்பட்ட டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்களுடன் வருமானத்தை ஒப்பீடு செய்து பார்த்தல் பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர் அல்லது விடய எழுது வினைஞரினால் மேற்கொள்ளப்படாதிருந்துடன் விநியோகிக்கப்பட்ட டிக்கட்டுக்கள் மற்றும் பெற்ற

வருமானங்களுக்குகிடையே ரூபா 99,305 தொகையான பற்றாக்குறை அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2011 செப்தெம்பர் 15 ஆந் திகதி அமைச்சுச் செயலாளரினால் அறிவிக்கப்பட்டிருந்த பிரகாரம் வாடகை வருமானத்தை சேகரிப்பதற்கு உரிய தகவல்களை மேற்பார்வை செய்தல், வாடகை செலுத்தாது பிரச்சாரம் செய்யப்படுகின்ற நிகழ்ச்சிகள் அல்லது வர்த்தக விளம்பரங்கள் தொடர்பாக பின்னர் ஆராய்ந்து பார்த்தல் மற்றும் கொடுப்பனவுகளை செலுத்தாதிருப்பதனைக் குறைத்தல் போன்ற நோக்கத்துடன் வாடகை வருமானத்தில் ரூபா 2,710,099 தொகையினை செலவிட்டு 2010 ஆம் ஆண்டின் போது சுயமாக இயங்கும் 02 இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இந்த இயந்திரங்கள் 2010 ஆம் ஆண்டில் தகவல் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் அதன் மூலம் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் ஒளிபரப்பை மாத்திரம் பரிசோதனை செய்யமுடியுமாக இருந்ததுடன் விண்ணப்பிக்காதிருந்த போதிலும் வரி அறவிடவேண்டிய வர்த்தக விளம்பரங்கள் ஒளிப்பரப்பப்படுகின்றனவா எனப் பரிசோதனை செய்தல்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) 1991 ஆம் ஆண்டு தொடக்கம் தனியார் வானொலி மற்றும் தொலைக்காட்சி அலைவரிசைகளை நடாத்துவதற்கான அனுமதிப்பத்திரம் வழங்கும் போது தற்காலிக அனுமதிப்பத்திரமாக விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் நிரந்தர அனுமதிப்பத்திரத்தை விநியோகிப்பதற்கோ அல்லது புதுப்பிக்கும் முறைமையொன்றோ தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அதனால் எவ்வித மேற்பார்வைகளுமின்றி அலைவரிசைகளில் ஒளிபரப்புச் செயற்பாடுகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுகின்றன. பின்னர் வழங்கப்பட்ட தற்காலிக அனுமதிப் பத்திரங்களில் முன்னர் குறிப்பிடப்படாத நிபந்தனைகளும் உள்ளடக்கப்பட்டிருந்தமையினால் நிறுவனம் தொடர்பாக தன்னாதிக்கமாக தீர்மானம் எடுத்தமையினால் பிரச்சினைகள் உருவாகியிருந்தது.

(ஈ) 2006 இன் 11 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 6(1) ஆம் பந்தியின் பிரகாரம் இலங்கையர்களின் பாரம்பரியங்களை விருத்தி செய்யும் நோக்கத்தில் வெளிநாடுகளில் தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சிகளை இந்நாட்டில் ஒளிபரப்புவதற்காக வரி விதிக்கப்பட்டிருந்தது. எனினும் 15 அனுமதிப்பத்திரங்களின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற கேபள், செய்மதி,

வலைப்பின்னல் மற்றும் தொலைபேசியூடான தொலைக்காட்சி அலைவரிசைகளினால் ஒளிபரப்பரப்படுகின்ற நிகழ்ச்சிகள் இந்த வரியின் கீழ் இல்லாமையினால் வரி விதிக்கப்பட்ட நோக்கம் இந்நாட்டினுள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. மேலும் சேகரிக்கப்படுகின்ற வரி வருமானங்களை செலவு வைப்பதற்காக நிதியமொன்றை உருவாக்குவதற்கு 2009 ஆம் ஆண்டின் அரசாங்க நிதித் திணைக்களத்துடன் இணங்கியிருந்ததுடன் அது 2013 யூலை வரையும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(உ) ரன்மிஹிதென்ன தேசிய தொலைக்காட்சி சினிமா பூங்காவனது 235 ஏக்கர் காணியில் மேற்கொள்ளப்படுவதுடன் அதில் பயிர்ச் செய்கை நடவடிக்கைகளிலிருந்து பெறப்படுகின்ற வருமானம் அனுப்பிவைக்கப்பட்ட வருமான அறிக்கையின் பிரகாரம் ரூபா 41,062 ஆக மாத்திரமாக இருந்தது. எவ்வளவு அளவான காணியில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது அதற்காக ஏற்பட்ட செலவினங்கள், சிற்றுண்டிச் சாலைக்கு வழங்கப்பட்ட உணவுப் பொருட்களின் பெறுமதி அளவுகள் மற்றும் விற்பனை செய்தல் தொடர்பான தகவல்கள் அமைச்சில் காணப்படாமையின் காரணமாக அது தொடர்பாக மேற்பார்வை செய்தல்கள் இடம்பெற்றிருக்கவில்லை.

(ஊ) 2012 ஆம் ஆண்டின் போது ரன்திஹிதென்ன தேசிய தொலைக்காட்சி சினிமா பூங்காவில் படப்பிடிப்பு, அறைவசதிகளைச் செய்தல், நுழைவுச்சீட்டு வருமானம் மற்றும் ஏனைய வருமானங்களின் கூட்டுத்தொகை ரூபா 8,929,977 ஆக இருந்ததுடன் ஆண்டின் போது செய்யப்பட்டுள்ள செலவினங்கள் ரூபா 48,528,779 ஆகும். 01 திரைப்படம் மற்முறு 02 தொலைக்காட்சி நாடகங்களுக்காக மாத்திரம் படப்பிடித்தல்கள் இடம்பெற்றிருந்தமை காரணமாக ஆண்டின் போது அரசாங்கத்திற்கு ரூபா 39,598,802 தொகையான நட்டமொன்று ஏற்பட்டிருந்ததுடன் இந்த வருமானத்தையும் அரசாங்க வருமானத்தில் செலவு வைப்பதற்குப் பதிலாக பொது வைப்புக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(எ) இலங்கை பின்னணியில் ஒரு துறையாகக் காணப்பட்ட தொலைக்காட்சி பயிற்சி நிறுவனம் 2010 ஏப்ரல் 30 ஆந் திகதிய 1657/20 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் வெகுசன ஊடாக அமைச்சின் கீழ் கையேற்கப்பட்டிருந்த போதிலும் 2013 ஆம் ஆண்டு வரையிலும் இது

முறையாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. இதற்காக பிரதான நிறைவேற்று பதவியொன்று அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் தற்காலிகமாக அமைச்சின் 06 உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். 2012 ஆம் ஆண்டில் ரூபா 15,717,077 தொகையான வருமானம் உழைக்கப்பட்டிருந்ததுடன் நியமிக்கப்பட்ட ஆறு உத்தியோகத்தர்களினதும் சம்பளத்தைச் கருத்திற்கொள்ளாது ரூபா 19,427,399 தொகையான செலவினத்தைச் சொய்து ரூபா 3,710,321 தொகையான தேறிய நட்டம் பெறப்பட்டிருந்தது. 2011 நவம்பர் தொடக்கம் இது வரை ரூபா 8,562,206 தொகையான மூலதனச் செலவினமும் செய்யப்பட்டிருந்தது.

(ஏ) தொலைக்காட்சி பயிற்சி நிறுவனம் தனியான நிறுவனமாக முறையாக ஸ்தாபிக்கப்பட்டிருந்தமையினால் அதில் உழைக்கப்பட்ட வருமானம் ரூபா 15,717,077 தொகை மற்றும் அங்கீகாரமின்றி அதில் செலவிடப்பட்ட ரூபா 10,682,695 தொகையான செலவினம் மீளாய்வாண்டிற்கான அமைச்சின் கீழ் அல்லது அரசாங்க கணக்கிற்காக கணக்கு வைத்தல்களோ மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஐ) 2012 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்ட வெகுசன ஊடக சம்பிரதாயக் கோவை 2013 யூலை 30 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஒ) பணனுள்ள ஊடக கலாசாரத்தைக் தோற்றுவிப்பதற்குக் காரணமான ஒழுக்க நெறியுள்ள ஊடக பாவனைக்காக அதிகாரச் சட்டமொன்றை அறிமுகப்படுத்தி அதற்காக காணப்படுகின்ற சகல மின்னியில் ஊடக அலைவரிசைகளின் நடவடிக்கைகளை ஒழுங்கமைப்பதற்காக தேசிய ஒளிபரப்பு அதிகார சபையை உருவாக்கும் செயற்பாடுகள் 2009 மே மாதம் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2013 யூலை மாதம் வரையில் அது உருவாக்கப்பட்டிருக்வில்லை.

## 1.14 மனிதவள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியனி | உள்ளபடியான பதவியணி | வெற்றிட எண்ணிக்கை | மேலதிக எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேட்ட நிலை | 14 | 14 | 00 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 03 | 02 | 01 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 97 | 86 | 11 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 33 | 32 | 01 | - |
| (v) | பிற (அமைய/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 00 | 01 | 00 | 01 |
| | மொத்தம் | 147 | 135 | 13 | 01 |

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மீளாய்வாண்டின் இறுதியிளவில் 13 வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. ஒதுக்கீட்டுத் தலைப்பு 210 – தகவல் திணைக்களம்

### 2.1 கணக்காய்வின் நோக்கெல்லை

தகவல் திணைக்களத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2013 யூலை 31 ஆந் திகதி திணைக்களத் தலைவருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின்

அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

## 2.2 கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல் அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 2.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் அரசாங்கத் தகவல் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இங்கே (அ) இலிருந்து (ஈ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 2.4 இலிருந்து 2.11 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்படுகின்றது.

### (அ) பதிவேடுகளையும் புத்தகங்களையும் பேணாமை

1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தினால் நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) நிதியேற்பாட்டை விஞ்சி பொறுப்புக்களுக்கு உடன்படல்**

நிதிப் பிரமாணம் 94(1) இன் பிரகாரம் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியேற்பாட்டை விஞ்சி பொறுப்புக்களுக்கு உடன்பட முடியாதிருந்த போதிலும் 21 செலவின விடயங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியேற்பாட்டை விஞ்சி ரூபா 3,143,831 தொகையான பொறுப்புக்களுக்கு உடன்பட்டிருந்தது.

**(இ) பொது வைப்புக் கணக்கு**

02 வருடங்களை விஞ்சிய ரூபா 230,622 தொகையான 03வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

(i) சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 10 வருடங்களை விஞ்சிய மரணித்த உத்தியோகத்தரிடமிருந்தும் வேலையிலிருந்து விலகிச் சென்ற மூன்று உத்தியோகத்தர்களிடமிருந்தும் அறவிட வேண்டிய கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 261,272 ஆக இருந்தது. அந்த மீதிகளை அறவிடுதல் தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமான நிலையில் காணப்பட்டது.

(ii) 2010 மே மாதம் இடம் மாற்றலாகிச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 301,446 தொகையான கடன் மீதியை 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் திணைக்களத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட மீதிகளின் கீழ் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(iii) கடன் வழங்குதல் தொடர்பான ஏற்பாடுகளின் பிரகாரம் பேணப்பட வேண்டிய அங்கத்தவர் கடன் பதிவேட்டில் தவணைப் பணம் மாத்திரம் குறிப்பிடப்பட்டிருந்தது.

## 2.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### (அ) வருடாந்த கொள்வனவுத் திட்டம்

மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய வரவு, செலவுத் திட்டச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய 402 மற்றும் 402(1) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியுடன் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை 2013 ஆகஸ்ட் மாதத்தின் போது பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருந்தது.

### (ஈ) உள்ளகக் கணக்காய்வு

திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வு பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 2012 ஆம் ஆண்டிற்காக 07 கணக்காய்வு ஐய வினாக்கள் வழங்கப்பட்டிருந்தன.

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### (அ) பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

கீழே வகைப்படுத்தப்பட்டுள்ளவாறு சில சொத்துக்கள் பயன்படுத்தப்படாது அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்டுக் காணப்பட்டமை கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்டது.

(i) உரிய பிரகாரம் சாத்திய வள ஆய்வு மேற்கொள்ளப்படாமல் 2.1 சதவீத வட்டி வீதத்தின் அடிப்படையில் 1999 திசெம்பர் 10 ஆந் திகதி வழங்குனருக்கும் தகவல் திணைக்களத்திற்கும் இடையில் செய்யப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் பிரான்ஸ் அரசாங்கதிடமிருந்து கிடைத்த கடன் உதவியின் கீழ் பிரான்ஸ் பிரேங்க் 9,150,000 (யூரோ 1,442,601) தொகைக்குச் சமமான ரூபா 102.2 மில்லியன்) தொகையில் 2003 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட இயந்திரம் 2013 யூலை வரையும் செயற்பாடற்று மற்றும் உரிய பராமரிப்பின்றிக் காணப்பட்டது.

(ii) மேற்கூறப்பட்ட கடன்தொகை 04 பகுதிகளின் கீழ் பெறப்பட்டிருந்ததுடன் அதற்காக 2013 யூலை 25 ஆந் திகதி வரையில் கடன் தொகையில் செலுத்தப்பட்ட பெறுமதி யூரோ 404,590 ஆக இருந்ததுடன் அதற்காகச் செலுத்தப்பட்டுள்ள வட்டி யூரோ 308,352 ஆகும். உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட வட்டி விகிதாசாரம் 2.1 சதவீமாக இருந்த போதிலும் அதற்குப் புறம்பாக 200029 மற்றும் 200061என்ற 2 கடன் வகைகளுக்காக 6.13 சதவீதப்படி 2013 யூலை வரையிலும் யூரோ 172,295 கூடிய விகிதாசாரத்தின் கீழும் செலுத்தப்பட்டிருந்தன. (வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தில் பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் ) இப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக 2010 ஆம் ஆண்டில் மூன்று நபர்களைக் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டிருந்ததுடன் பகிரங்க கேள்வி கோரலின் ஊடாக விற்பனை செய்வதற்காக அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும் அவ்வாறு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என பரிந்துரை செய்திருந்தது.

அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டம் தொடர்பாக பொறுப்புவாய்ந்த தரப்பினரை இனங்காண்பதற்காக 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) விற்பனைப் பட்டியல் தயாரித்தல், நுகர்வோர்களுக்கு இருப்புக்களை இனங்காண்பதற்கான வசதிகளை வழங்குதல், இருப்புகளை பதிவேட்டில் இடப் தொடர்பாக கணனி மென்பொருள் ரூபா 600,000 தொகை செலுத்தி 2008 ஆம்

ஆண்டின் போது அறிமுகப்படுத்தப்பட்டிருந்த போதிலும் விற்பனைப் பட்டியல் தயரித்தல் தவிர ஏனைய செயற்பாடுகளுக்காக இந்தக் கணனி மென்பொருள் 2013 யூலை வரையிலும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

நிதிப் பிரமாணம் 756 இன் பிரகாரம் அரசாங்க வெளியீட்டுப் பணியகத்தில் காணப்படுகின்ற புத்தகங்கள் தொடர்பாக 2012 ஆம் ஆண்டிற்கான மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(இ) கிடைக்க வேண்டிய மீதி**

வெளித் தரப்பினர்களிடமிருந்து 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டியிருந்த கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 3,255,876 ஆக இருந்ததுடன் அதனை அறவிடுதல் தொடர்பான நிலைமை திருப்திகாரமானதாக இருக்கவில்லை.

## 2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வை பார்த்தலின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) நிதிப் பிரமாணம் | | |
| (i) நிதிப் பிரமாணம் 371(2) | 763,900 | கட்டு நிதிகள் வழங்குதல் பதவி நிலை உத்தியோகத்தர்களுக்காக மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்த போதிலும் 36 சந்தர்ப்பங்களின் போது ரூபா 763,900 |

| | | | |
|---|---|---|---|
| | | | தொகை பதவிநிலையற்ற உத்தியோகத்தர் களுக்கு வழங்கப்பட்டிருந்தன. |
| (ii) | நிதிப் பிரமாணம் 371(2) (ஆ) | 93,400 | வழங்கப்பட்ட செயற்பாடு நிறைவு பெற்றதும் உடனடியாக உப கட்டுநிதி தீர்க்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 93,400 தொகையான உப கட்டுநிதியைத் தீர்ப்பதற்காக 04 சந்தர்ப்பங்களின் போது 43 நாட்டுகளுக்கும் 98 நாட்களுக்கு இடையிலான காலம் எடுக்கப்பட்டிருந்தது. |
| (iii) | நிதிப் பிரமாணம் 454 | - | இருப்புப் புத்தகம் சமப்படுத்தப்பட்டு மீதி முன்கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | நிதிப் பிரமாணம் 752 | - | பொருட் பதிவேட்டுப் புத்தகத்தில் சகல பதிவுகளும் பொருட் பதிவேட்டு உறுதிச்சீட்டின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் பெறப்பட்ட பொருட்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக எவ்வித எழுத்துமூல சான்றுகளும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (v) | நிதிப் பிரமாணம் 802(8) | | வாகனம் கொள்வனவு செய்யப்பட்ட திகதி, விலை பழுதுபார்த்தல்கள் செயற்பாடற்றுக் காணப்பட்ட காலம் போன்ற தகவல்களை உள்ளடக்கிய பதிவேடு பராமரிக்கப்பட்டிருக்க வில்லை |
| (vi) | நிதிப் பிரமாணம் 1645 | | வாகன சம்பவத்திரட்டுப் புத்தகம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |

## 2.7 செயலாற்றல்

2012 இன் வருடாந்த மதிப்பீடு மற்றும் கூட்டிணைந்த திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### திட்டமிடல்

2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் 2.4.2 ஆம் பந்தியின் பிரகாரம் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படாமையின் காரணமாக வருடாந்த செயல்நடவடிக்கைத்திட்டத்தை செயலாற்றல் அறிக்கையுடன் இணக்கஞ் செய்யமுடியாதிருந்தது.

(அ) செயல்நடவடிக்கைத் திட்டத்தில் 25 செயற்பாடுகளுக்காக ரூபா 27,000,000 தொகையான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் மேற்கூறப்பட்ட சுற்றுநிருபத்தின் பிரகாரம் செயல்முன்னேற்றத்தை மதிப்பீடு செய்வதற்கு ஏற்றவிதத்தில் முறைமைகளைப் பூர்த்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்ட செயற்பாடுகள் எண்ணிக்கை ரீதியாகக் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 94 மில்லியன் நிதியேற்பாட்டிலிருந்து ரூபா 3.8 மில்லியன் நிதியேற்பாட்டிற்குரிய செயல்நடவடிக்கைத் திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.8 சர்ச்சைக்குரிய தன்மயிலான கொடுக்கல் வாங்கல்கள்

அமைச்சு மேற்கொண்ட சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய தன்மையைக் கொண்டிருந்தன. தெரிவுச் செவ்வையின்போது அவ்வாறாகப் புலனாகிய சில கொடுக்கல் வாங்கல்களது விபரங்கள் கீழே காணப்படுகின்றன.

திணைக்களத்தினால் கொழும்பு கோட்டை அரசாங்க வெளியீட்டுப் பிரிவின் களஞ்சியம் காணப்படுகின்ற கட்டிடத்தின் கீழ் மாடி வெளித்தரப்பினருக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் 2004 ஆம் ஆண்டு தொடக்கம் திணைக்களத்திற்கு அறவீடுகள் காணப்படவில்லை. மேலும் மின்சாரப்பட்டியல் மற்றுமு ஆதனவரிக் கட்டணமாக திணைக்களத்திற்கு அறவிட வேண்டியிருந்தது.

ரூபா 898,780 தொகையை அறவிடுவதற்கு 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.9 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

அமைச்சு மேற்கொண்ட சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றதாக இருந்தன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சந்தர்ப்பங்களில் சில கீழே காண்பிக்கப்படுகின்றன.

### 2.9.1 ஊடக நிலைய நிர்மாணம்

திணைக்களத்தின் புதிய ஊடக நிலையத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 200,763,112 தொகையில் தனியார் நிறுவனத்திற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 196,080,674 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 யூன் 08 ஆந் திகதிய இறுதிப்பட்டியலை செலுத்துவதற்கு முன்னர் அரசாங்கக் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.12.2 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் வேலை நிறைவேற்றப்பட்டமைக்கான சான்றிதழ் மற்றும் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டு இனங்காணப்பட்ட குறைபாடுகளை சரிசெய்ததன் பின்னர் கட்டிடத்தை கையேற்றமைக்கு ஆலோசனைக் கம்பனியிடம் சான்றிதழ் பெறப்பட்டிருக்கவில்லை. அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.12.1 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் நிறுவனத் தலைவரினால் கட்டிடத்தைக் கையேற்பதற்கு முன்னர் நிறைவேற்றப்பட்ட வேலைகளின் தரத்தன்மை சுயாதீனமாக பரிசீலனை செய்யப்படாமல் இறுதிப்பட்டியல் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) புதிய ஊடக நிலையத்தில் $700m^2$ அளவையான பரப்பளவினையுடைய கலையரங்கம் நியமங்களுக்குப் புறம்பாக நிர்மாணிக்கப்பட்டிருந்தது. ஆலோசனைக் கம்பனியினால் 2011 நவம்பர் 02 ஆந் திகதி கட்டிடத்தைப் பொறுப்பேற்று 6 மாதங்களை விஞ்சுவதற்கு முன்னர் வெளிப்படுத்தப்பட்ட பின்வரும் குறைபாடுகள் 2013 நவம்பர் 30 ஆந் திகதி வரையிலும் சரிசெய்யப்பட்டிருக்கவில்லை.

(i) கலையரங்கத்திற்கு மின்சாரம் வழங்கும் போது 3 core வயருக்குப் பதிலாக குறைந்த தரத்திலுள்ள வயர் பயன்படுத்தப்பட்டமையினால் மின்சார முறைமையை முறையாகவும் தேவையான பிரகாரமும் பயன்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

(ii) கலையரங்கத்தில் ரூபா 11,000,000 தொகை செலவிடப்பட்டு ஸ்தாபிக்கப்பட்ட குளிரூட்டி முறைமை, மின்சாரம் மற்றும் ஒலி வழங்கும் பிரிவிற்காக செயற்படுத்தப்படாதிருந்ததுடன் அதில் உள்ள பெறுமதியான உபகரணங்களின் காலாவதியாகியமை அதற்குத் தாக்கமளித்திருந்தது.

(iii) கலையரங்கத்தின் மேடையின் இருபக்கமும் நிர்மாணிக்கப்பட்ட 02 விறாந்தைகளிலும் நுழைதலக்கான படிக்கட்டக்கள் நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) $60m^2$ விஸ்தீரணம் கொண்ட மேடை ரூபா 402,858 தொகை செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் அங்கீகரிக்கப்பட்ட பலகைகளைப் பயன்படுத்தாமை அல்லது பலகைகளை பாதுகாப்பாக பயன்படுத்தாமையினால் சிறு எலும்புகள் துளைத்திருந்தது. இதன் காரணமாக மேடை பாதுகாப்பற்ற நிலையில் காணப்பட்டது.

(v) சத்தத்தைக் கட்டுப்படுத்துவதற்காக சுவரைப் பூர்த்தி செய்யும் பொது நியமங்களுக்கப் புறம்பாக முறையற்ற வகையில் பூர்த்தி செய்யப்பட்டமையினால் சத்தத்தைக் கட்டுப்படுத்தாமையினால் தேவையான நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(vi) மேடையின் இருபக்கமும் சுவர் நியமங்களுக்குப் பறம்பாக நிர்மாணிக்கப்பட்டமையினால் $75m^2$ இற்கு அதிகமான பகுதி கறையானின் அரிப்பிற்கு உள்ளாகியிருந்தது.

(இ) புதிய கட்டிடத்தின் அவசர வெளியேறல் கதவுகளுக்கு உரிய கொழும்பு மாநகர சபை மற்றும் பிரதான தீயணைப்பு உத்தியோகத்தரின் அறிக்கை பெறப்படாமலும் உரிய நியமங்களின்றியும் தயாரிக்கப்பட்ட 04 தீ பாதுகாப்பு கதவுகளுக்காக ஆலோசனை நிறுவனத்தின் சிபார்சின் அடிப்படையில் ரூபா 410,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) நிர்மாணித்தல்களில் செலவிடப்பட்ட செலவினப் பரிசோதனையின் போதும் வேலைத் தலத்திற்குரிய ஆலோசனை நிறுவனத்தின் உத்தியோகத்தர்களுடன் கணக்காய்வு உத்தியோகத்தர்கள் மேற்கொண்ட தெரிவு பௌதீகப் பரிசோதனையின் போதும் வெளிப்படுத்தப்பட்ட மற்றும் இணங்கப்பட்ட பிரகாரம் ஒப்பந்தக்காரருக்கு ரூபா 15,436,872 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(உ) திணைக்களத்தின் புதிய ஊடக நிலையத்திற்காக 400v மின்வலுத் தேவைக்காக கேள்வி சமர்ப்பிக்கப்பட்டு 600v இயலளவு அமைக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக பயன்படுத்தப்பட்ட கேபிள் அளவிடைப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட நியமங்களுக்குப் புறம்பாக அளவிடைப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட நியமங்களுக்குப் பறம்பாக இணைக்கப்பட்டிருந்தது. மேலும் அளவிடைப் பத்திரத்தின் பிரகாரம் விசேட கட்டளையின் மூலம் பெறப்பட்ட ஆலோசனைக் கம்பனியின் சிபார்சின் அடிப்படையில் வழங்கப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அந்தக் கட்டளை அல்லது கொள்வனவு செய்யப்பட்ட விலைப்பட்டியல் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் சந்தையில் காணப்படுகின்ற விலையினை விட அசாதாரணமாக அதிக விலை அதாவது ரூபா 12,059,320 தொகை ஒப்பந்தக் காரருக்கச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஊ) புதிய ஊடக நிலையத்தை ரூபா 315.4 தொகையான ஒப்பந்தப் பெறுமதியில் நிர்மாணிக்கும் போது ரூபா 15,436,872 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தமை ஆலோசனை வழங்கிய பொறியியல் கூட்டுத்தாபனத்தின் உத்தியோகத்தர்களுடன் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

(எ) இந்த நிர்மாணத்திற்காக உப ஒப்பந்தப் பதிவேடு, பொறுப்புச் சான்றிதழ் (மிச்சார உபகரணங்கள், குளிரூட்டி இயந்திரம், தீ பாதுகாப்பு கதவுகள்) தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர் சமர்ப்பித்த கேள்வி ஆவணங்கள், சகல கேள்வி தாரர்களினதும் கேள்வி ஆவணங்களின் திறக்கப்படாத பிரதிகள், பழைய கட்டிடத்தை உடைத்து அகற்றுதல் தொடர்பாக ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கை போன்ற தகவல்கள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்படாமையினால் திருப்திகரமாக அக்கொடுக்கல் வாங்கல்களை சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2.9.2 புதிய ஊடக நிலையத்திற்கு தளபாடங்களைக் கொள்வனவு செய்தல்

புதிய ஊடக நிலையத்திற்கு தளபாடங்களைக் கொள்வனவு செய்வதற்காக 05 நிறுவனங்களிலிருந்து கூறுவிலைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் குறைவான கூறுவிலை சமர்ப்பித்திருந்த வழங்குனரின் நிறுவனம் தெரிவு செய்யப்பட்டு ரூபா 22,860,841 தொகையில் தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாதிரிப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்ட 23 விடயங்களுக்கிடையில் 11 வகையான தொகுதிகளும் இணங்கப்பட்ட மாதிரிகளுக்குப் புறம்பாக வழங்குனரின் விருப்பத்தின் பிரகாரம் வழங்கப்பட்டிருந்தது. இந்த வேறுபாடு காணப்படுகின்ற போது கிடைத்த பொருட்கள் பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தரின் பரிசீலனை இன்றியும் 8.12.1 மற்றும் 8.12.2 ஆம் வழிகாட்டிகளுக்கு முரணாகவும் ரூபா 1,285,065 தொகை செலுத்தி ஆலோசனை பெற்ற கம்பனியின் சிபார்சு இன்றியும் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) தனியார் கம்பனிக்கு 2011 நவம்பர் 30 மற்றும் 2011 திசெம்பர் 30 போன்ற திகதிகளில் தளபாடங்களைக் கொள்வனவு செய்ததற்காக ரூபா 21,006,300 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 2,083,800 பெறுமதியான பொருட்கள் தொடர்பான குறைபாடுகள் 2011 ஆம் ஆண்டின் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையிலும் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. பின்வரும் விடயங்கள் தொடர்பாக நியமிக்கப்பட்ட திணைக்களக் குழுவினால் ஆலோசனைக் கம்பனியின் சிபார்சு இன்றி 04 இருக்கைகளுள்ள சோபா ரூபா 211,200 தொகையும் நுழைவு மண்டப கதிரைகளுக்காக ரூபா 826,000 தொகையும் ஆக ரூபா 1,037,200 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டதாக கணிப்பீடு செய்யப்பட்டு அத் தொகையை நிறுத்தி வைத்தல்களிலிருந்து கழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டமையினால் நிறுத்தி வைத்தல்களின் நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(i) கேள்வி கோரும் போது 04 இருக்கைகளுள்ள (Fair Seater Sota) 15 சோபாக்கள் ஒன்று ரூபா 105,600 படி ரூபா 1,584,000 தொகையில் வழங்குவதற்கு உடன்பட்டிருந்ததுடன் அதற்காக 04 இருக்கைகளுள்ள (four seater sata) 08 சோபாக்களுக்காக ரூபா 844,800 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இருந்த போதிலும் 04

இருக்கைகளுள்ள (four seater sofa) சோபா எதுவும் வழங்கப்பட்டிராததுடன் அதற்காக அளவிடைப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட மாதிரிகளுக்குப் புறம்பாக (இயற்கையான பெதருக்குப் பதிலாக செயற்கையான லெதர் ஈடுபடுத்தப்பட்டு) மேற்கூறப்பட்ட கூறுவிலையின் கீழ் 03 இருக்கைகளுள்ள (Three seater sofa) சோபா எதுவும் வழங்கப்பட்டிராததுடன் அதற்காக அளவிடைப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட மாதிரிகளுக்குப் புறம்பாக (இயற்கையான பெதருக்குப் பதிலாக செயற்கையான லெதர் பயன்படுத்தப்பட்டு) மேற்கூறப்பட்ட கூறுவிலையின் கீழ் 03 இருக்கைகளுள்ள (Three Seater sofa) 08 சோபாக்கள் வழங்கப்பட்டிருந்தன.

(ii) 04 இருக்கைகளுள்ள 46 நுளைவு மண்டபக் கதிரைகள் (four seater lobby chair) 01 கதிரை ரூபா 29,500 படி ரூபா 1,357,000 தொகைக்கு வழங்கவதற்கு இணங்கியிரந்த போதிலும் அளவிடைப் பத்திரம் மற்றும் மாதிரிகளுக்குப் புறம்பாக 03 இருக்கைகளுள்ள (Three seater) 09 கதிரைகள் மற்றுமு் 02 இருக்கைகளுள்ள (two seater) 08 கதிரைகள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தன. ஒரு இருக்கை (lobby seat) ஒரு பகுதியாகக் கருதி 42 இருக்கைகளுக்கு கொடுப்பனவு செய்யப்பட்ட காரணத்தினால் ரூபா 973,500 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. மேலும் கணக்காய்வுச் சந்தர்ப்பம் வரை கதிரைகள் துருப்பிடிக்கும் நிலைக்கு உள்ளாகியிருந்தது. இது தொடர்பாக எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 1.2.1 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் அரசாங்கத்திற்கு மிகவும் சாதகமான வகையில் மாதிரிகளுடனும் தரத்துடனும் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்ததுடன் அதற்காக அரசாங்க கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டியருந்ததுடன் அதற்காக அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.4 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் ஒப்பந்தக் கொவையிடல் மற்றுமு் பகுதிகளாகப் பிரித்தல் மேற்கொள்ளப்பட முடியுமான போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்படாமையினால் 35 விடயங்களுக்காக ரூபா 2,249,772 தொகையான நிதி ரீதியான நலநன அரசாங்கம் பெறக் கூடியதாக இருந்த போதிலும் கூறுவிலைகள் ஒப்பீடு செய்யப்பட்டு அந்த நலனைப் பெற்றுக் கொள்வதற்கு திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஆலோசனைக் கம்பனியின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட பௌதீகக் கணக்காய்வப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டதன் பிரகாரம் இணங்கப்பட்ட மாதிரிகளுக்குப் புறம்பாக 12 விடயங்களுக்காக ரூபா 3,522,700 தொகையான மேலதிகக் கொடுப்பனவும் இணங்கப்பட்ட மாதிரிகளுக்குப் புறம்பாக ரூபா 2,568,800 தொகையில் வழங்கப்பட்ட 03 பொருள் வகைகள் பயன்படுத்த முடியாத நிலையிலும் காணப்பட்டன.

(உ) தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட்ட கம்பனியின் கேள்விக்குரிய மூலப் பிரதி அல்லது அதன் நிழற்படப் பிரதியோ கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.9.3 ஏனைய கொள்வனவுகள்

(அ) 13 கணனிகள் மற்றும் 13 யூ.பீஎஸ் என்பன ரூபா 1,312,220 தொகையில் கொள்வளவு செய்வதற்காக 2012 மார்ச் 17 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்த வழங்கலின் பொது அரசாங்கக் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.4.10(ஆ) வழிகாட்டியின் பிரகாரம் செயலாற்றல் பிணையினைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் 8.9.1(அ) வழிகாட்டியின் பிரகாரம் முறையான ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. 2012 மே 23 ஆந் திகதி வரையிலும் திணைக்களத்திற்கு அந்தக் கணனிகளும் உபபாகங்களும் வழங்கப்பட்டிராததுடன் அதில் ரூபா 928,628 பெறுமதியான 09 கணனிகள் மற்றும் 13 யூ.பீஎஸ் என்பவற்றின் கட்டணனை இரத்துச் செய்யப்பட்டமையினால் அதில் திணைக்களத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை அறவீடு செய்து கொள்வதற்கு முடியாதிருந்தது.

(ஆ) திணைக்களத்திற்காக ரூபா 1,116,000 பெறுமதியான கெமரா உபகரணங்களைக் கொள்வனவு செய்யும் போது அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 7.8, 7.9.1, 7.11.1 மற்றும் 8.9.1 ஆம் வழிகாட்டிகளுக்கு முரணாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. கொள்வனவுக் குழுவினால் அதிக கூறு விலை சமர்ப்பித்த வழங்குனரிடமிருந்து கெமரா உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு வழங்கப்பட்ட தீர்மானத்திற்கான காரணம் விளக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.10 முகாமைத்துவ நலிவுகள்

### பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

திணைக்களத்திற்கு மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்ட 6 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு 2013 யூலை 30 ஆந் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிராததுடன் அந்த ஐயவினாக்களில் கணிப்பீடு செய்யக்மூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 534,260,873 ஆகும்.

## 2.11 மனிதவள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியனி | உள்ளபடியான பதவியணி | வெற்றிட எண்ணிக்கை | மேலதிக எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேட்ட நிலை | 11 | 06 | 06 | 01 |
| (ii) | மூன்றாம் நிலை | 16 | 06 | 10 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 225 | 189 | 41 | 05 |
| (iv) | ஆரம்ப நிலை | 52 | 46 | 06 | - |
| (v) | பிற - அமைய | - | 04 | - | 04 |
| | - தற்காலிக | 20 | 14 | 06 | - |
| | மொத்தம் | 324 | 265 | 69 | 10 |

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

மீளாய்வாண்டின் இறுதியிளவில் 69 வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) ஏனைய தரப்பினர்களுக்கு விடுவிக்கப்பட்ட மனித வளங்கள்**

69 வெற்றிடங்கள் காணப்பட்ட போதும் திணைக்களத்தின் 08 உத்தியோகத்தர்கள் ஏனைய திணைக்களங்கள் மற்றும் அமைச்சுக்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்தனர். அந்த உத்தியோகத்தர்களில் 6 பேருக்காக 2012 ஆம் ஆண்டின் போது சம்பளம் மற்றும் படியாக ரூபா 2,100,107 கூட்டுத்தொகையானது திணைக்களத்தினால் செலவிடப்பட்டிருந்தது.

## 3. ஒதுக்கீட்டுத் தலைப்பு 211 – அரசாங்க அச்சாளர் திணைக்களம்

### 3.1 கணக்காய்வின் நோக்கெல்லை

அரசாங்க அச்சாளர் திணைக்களத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் வருமானக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2013 ஒக்தோபர் 02 ஆந் திகதி திணைக்களத் தலைவருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

## 3.2 கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு, இணக்கக் கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல் அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 2.3 கணக்காய்வு அவதானிப்புகள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் அரசாங்கத் தகவல் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இங்கே (அ) இலிருந்து (உ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 3.4 இலிருந்து 3.13 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்படுகின்றது.

### (அ) கணக்குகளைச் சமர்ப்பித்தல்

திணைக்களத்தினால் விடய இல. 21101 இற்குரிய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று 2013 மார்ச் 31 ஆந் திகதி வரையில் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அது 1 ½ மாத தாமதத்தின் பின்னர் 2013 மே 16 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### (ஆ) பொது வைப்புக் கணக்கு

02 வருடங்களை விஞ்சிய ரூபா 370,453 தொகையான வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) வருமானக் கணக்குகள்**

சமர்ப்பிக்கப்பட்ட வருமானக் கணக்கின் பிரகாரம் ரூபா 612,549,490 தொகையான வருமானம் நிலுவையாகக் காணப்பட்டதுடன் அந்த நிலுவையாக இருந்த வருமானம் 1 வருடம் முதல் 23 வருடங்களுக்கிடையிலான கால இடை வெளிக்குரியதாகும். அந்த நிலுவை வருமானத்தை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமான நிலையில் காணப்பட்டது.

**(ஈ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**கடன் நிலுவை மீதி**

21101 ஆம் இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக்கூற்றுக்களின் பிரகாரம் 2 வருடங்களுக்கு மேற்பட்ட அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 6,259,450 ஆக இருந்ததுடன் அந்த நிலுவை மீதிகளை அறவிடுதல் தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமான நிலையில் காணப்பட்டது.

## 3.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 3.4.1 கூட்டிணைந்த திட்டம்

சகல அமைச்சுகளினதும் செயலாளர்கள், மாகாணசபைகளின் பிரதான செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்கள் என்போருக்கு விலாசமிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச பொது நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் ஆகக் குறைந்தது தொடர்ந்து வரும் 03 வருடங்களுக்கான கூட்டிணைந்த திட்டம் அமைச்சினால் ஆண்டின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத் திட்டமானது 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4.2 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய வரவு, செலவுத் திட்டச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த கொள்வனவுத் திட்டம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### (அ) செயற்பாடற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்

கீழே காண்பிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் சில சொத்துக்கள் செயற்பாடற்று அல்லது குறைவான பயன்பாட்டுடன் காணப்படாமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| சொத்து வகை | அலகுகளின் எண்ணிக்கை | செயற்பாடற்று அல்லது குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்ட காலம் |
|---|---|---|
| கொமொரி இயந்திரம் | 01 | 05 வருடங்கள் |
| PO 33 இயந்திரம் | 01 | 06 வருடங்கள் |
| Polar Cutter இயந்திரம் | 01 | 05 வருடங்கள் |

### (ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

2010 திசெம்பர் 17 ஆந் திகதிய பீஎப்/மெய்மையாய்வுச் சபை/01 ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தினால் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2013 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்டு அவ்வறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2013 திசெம்பர் 20 ஆந் திகதி வரையிலும் அந்த அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இறுதியாக பொருள் மெய்மையாய்வு 2011 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**(இ) பௌதீக பரிசோதனை**

2012 ஆகஸ்ட் 16 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட வாகனப் பட்டியல்களின் பிரகாரம் 2013 செப்தெம்பர் 10 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது 06 வாகனங்கள் திணைக்களத்தின் வளவில் காணப்படாதிருந்ததுடன் அந்த சந்தர்ப்பத்தின் போது அந்த வாகனங்கள் ஓட்டச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்படாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

**(ஈ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

திணைக்களத்தினால் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 01 வருடத்திற்குக் குறைவாக தீர்க்கப்படாத பொறுப்புக்கள் ரூபா 6,422,206 ஆக இருந்தது. மொத்த பொறுப்புக்களிலிருந்து ரூபா 2,482,175 தொகை ஒதுக்கீட்டுக் கணக்கில் பொறுப்பாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

**3.6 இணங்காமை**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வை பார்த்தலின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) அமைச்சரவைத் தீர்மானம் | | |
| 1991 திசெம்பர் 23 ஆந் திகதிய அமப/990/1981 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானம் | | பதவியணியினருக்குப் பல்வேறு கொடுப்பனவுகளுக்குப் பதிலாக ஒட்டுமொத்த செயற்பாடுகளையும் உள்ளடக்கும் வகையில் புதிய ஊக்குவிப்புக் கொடுப்பனவு முறையொன்றை அமுல்ப்படுத்துவதற்கு நிறுவனப் பணிப்பாளர் அறிவித்திருந்த போதிலும் |

| | | |
|---|---|---|
| | | அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படாது உத்தியோகத்தர்களுக்கு முறையற்ற வகையில் உற்பத்தி நிலைமையை கட்டியெழுப்பவதற்காக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவை<br>---------------------------------------- | | |
| (i) XXVIII ஆம் அத்தியாயத்தின் 1.1 ஆம் பிரிவு | | அரசாங்க உத்தியோகத்தர்களின் கடமைகளைச் செய்ய வேண்டிய பொதுவான அலுவலக நேரம் சகல வேலை நாட்களிலும் மு.ப 8.30 தொடக்கம் பி.ப 16.15 வரையாக இருந்த போதிலும் திணைக்களத்தில் வேலை செய்கின்ற நாட்களில் பகல் சேவைக்காலம் மு.ப 8.30 தொடக்கம் பி.ப 15.45 மற்றும் இரவு சேவைக்காலம் பி.ப 20.30 தொடக்கம் மு.ப 3.15 வரையும் இருந்தமை அவதானிக்கப்பட்டது. |
| (ii) VIII ஆம் அத்தியாயத்தின் 3.2 ஆம் பிரிவு | | மேலதிக நேரக் கொடுப்பனவு குறிப்பாக இனங்காணப்பட்ட வேலைகளுக்காக மாத்திரம் செலுத்தக் கூடியதாக இருந்த போதிலும் அதற்கு முரணாக திணைக்களத்தின் ஒரு உத்தியோகத்தருக்கு 106¼ மணித்தியாயலத்திற்காக மேலதிக நேரக் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. |
| (iii) IX ஆம் அத்தியாயத்தின் 1.2 ஆம் பிரிவு | 319,300 | இரகசியப் பிரிவின் கூரையை அமைத்தல் மற்றும் திணைக்களத்தை நவீகமயப்படுத்தும் செயற்பாடகளின் மேற்பார்வை, கட்டிடம், இயந்திரம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளாக மூன்று உத்தியோகத்தர்களுக்கு உள்ளபடியான பதவியின் சம்பளத்திற்கு மேலதிகமாக நிறுவனப் பணிப்பாளரின் முன் அங்கீகாரமின்றி செலுத்தப்பட்டிருந்தது. மேலும் உரிய தகவல்கள் |

கொடுப்பனவு உறுதிச்சீட்டில் இணைக்கப்பட்டிருக்காததுடன் கணிப்பீடு செய்தல் தொடர்பாக பரிசிலனை செய்யப்படாமல் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(இ) நிதிப் பிரமாணம்

(i) நிதிப் பிரமாணம் 110 — இழப்புத் தொடர்பான பதிவேடு பேணப்பட்டிருக்க வில்லை.

(ii) நிதிப் பிரமாணம் 371(5) — 1,458,291 — கொள்வனவு செய்யும் போது பொருட்கள் களஞ்சியத்திற்குப் பெறப்படாமல் அப் பொருட்களுக்காக கூறுவிலை சமர்ப்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்தின் போதே கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) பொது நிருவாகச் சுற்றுநிருபம்

2012 மார்ச் 26 ஆந் திகதிய 07/2012 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 03 ஆம் பந்தி மற்றும் 1997 பெப்ரவரி 03 ஆந் திகதிய 8/97 ஆம் இலக்க சுற்றுநிருபம் — 782,100

(i) மேலதிக நேரக் கொடுப்பனவிற்கு உரித்தான உத்தியோகத்தர்களுக்கு விசேட கொடுப்பனவு அதாவது கூட்டிணைந்த கொடுப்பனவிற்கச் சமமான மேலதிக கொடுப்பனவு உரித்தற்றாயிருந்த போதிலும் தேசத்திற்கு மகுடம் கண்காட்சிக்காக பங்குபற்றிய திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்கு மேலதிக நேரக் கொடுப்பனவுக்கு மேலதிகமாக விசேட கொடுப்பனவும் செலுத்தப்பட்டிருந்தது.

(ii) திணைக்களத் தலைவரின் சிபார்சின் அடிப்படையில் அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரமின்றி நீண்ட காலமாக ஆகக் கூடிய எல்லையினை விஞ்சி மேலதிக நேரக் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது.

(iii) மாதமொன்றிற்கு 20 மணித்தியாலத்திற்கு மேற்பட்ட மேலதிக நேர சேவையில் ஈடுபடுகின்ற உத்தியோகத்தர்களின் பட்டியலொன்று திணைக்களத்தினால் அமைச்சிற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.

(iv) மேலதிக கடமைகள் தொடர்பாக தாம் செய்த சிபார்சுகள் ஒவ்வொரு 03 மாதங்களுக்கு ஒரு தடைவயும் திணைக்களத் தலைவர் மீளாய்வு செய்திருக்கவில்லை.

(v) நிதிக் கொடுக்கல் வாங்கல்களில் உரிய மாதிகளைச் செயற்படுத்த வேண்டியிருந்த போதிலும் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் நடைமுறைகளுக்குப் பொருந்தாத வகையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். உதாரணம் :- ஒரு மாதத்தின் தெரிவுப் பரிசோதனையின் போது உத்தியோகத்தர்கள் 35 மணித்தியாலம் தொடக்கம் 86 மணித்தியாலம் வரையாக 5 உத்தியோகத்தர்கள் தொடர்ச்சியாக கடமைச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(உ) திறைசேரிச் சுற்றுநிருபம்

-------------------------------------------

| | | |
|---|---|---|
| 2008 யூன் 24 ஆந் திகதிய பீஎப்/06/07/02/01 ஆம் இலக்க திறைசேரிப் பிரதிச் செயலாளரின் கடிதம் | 929,482 | அச்சிடல் செயற்பாடுகளுக்காக தனியார் நிறுவனம் ஒன்றிடமிருந்தும் 10 நபர்களிடமிருந்தும் கிடைக்க வேண்டியிருந்த நிலுவை வருமானம் 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்பட்டிருக்கவில்லை. |

(ஊ) கொள்கை வகுத்தல் மற்றும் அமுலாக்கல் அமைச்சின் சுற்றுநிருபம்

| | |
|---|---|
| 1991 திசெம்பர் 23 ஆந் திகதிய பீபீஜ/எம்பீ/எப்சீ/18 ஆம் இலக்க கொள்கை வகுத்தல் மற்றும் அமுலாக்கல் அமைச்சின் கடிதம் | பாராளுமன்ற இணைப்பு அலுவலர் பதவிக்கு மோட்டார் சைக்கிலுக்காக 40 லீற்றர் எரிபொருள் மாத்திரம் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் வீட்டிற்குச்செல்வதற்காக போக்கவரத்து வசதி வழங்கப்பட்டிருந்தது. |

## 3.7 செயலாற்றல்

2012 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காணப்பிக்கப்படுகின்றன.

### (அ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான செயற்பாடுகள்

(i) அச்சிடப் செயற்பாட்டின் செயற்திறனை அதிகரித்துக் கொள்வதற்கு வசதியளிக்கும் வகையில் அச்சிடல் ஊழியர் பயிற்சி மற்றும முன்னேற்றத்திற்காக 2012 ஆம் ஆண்டின் நிதியேற்பாடுகளிலிருந்து 77 சதவீதம் அதாவது ரூபா 308,000 தொகை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) குறிப்பிடப்பட்ட திகதியில் உள்ளவாறு பாடசாலைப் புத்தகங்களை அச்சிட்டு கையளிக்க முடியாமை உரிய மாதிரிகளுக்கு இணங்காமை என்பவற்றினால் தொடர்ச்சியாக தண்டப் பணம் மற்றும் தாமதக் கட்டணங்களைச் செலுத்த வேண்டியேற்பட்டதுடன் 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளின் போது அதற்காக ரூபா 1,292,689 தொகை மற்றும் ரூபா 3,662,309 தொகை செலுத்தப்பட்டிருந்தது. மேலும் 2012 ஆம் ஆண்டில் ஒட்டுமொத்த பாடசாலைப் புத்தகங்களின் கட்டளையில் 1.25 சதவீதமான குறைவான கட்டளை அளவு வருடாந்தம் கிடைத்திருந்த போதிலும் உடன்படிக்கையின் பிரகாரம் குறிப்பிட்ட திகதியில்

உள்ளவாறு பாடசாலைப் புத்தகங்களை அச்சிட்டு கையளிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) திட்டமிடல்**

**வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க செயற்படாமை**

(i) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் உற்பத்திச் செயற்பாடுகளை செயற்திறனாக நிறைவேற்றுவதற்குச் தேவையான பெலெட் ட்ரெக் (Pallet Truck) இயந்திரத்தைக் கொள்வனவு செய்வதற்குத் தேவையான நிதியேற்பாடுகள் செலவின விடயத்தின் கீழ் வழங்கப்பட்டிருந்தது. அந்த செலவின விடத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளில் 75 சதவீதம் செலுத்தப்பட்டு ரூபா 85,755,103 தொகையான நிதியேற்பாடு ஆண்டின் இறுதி வரையிலும் எஞ்சியிருந்த போதிலும் அந்த இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) நிதிப் பிரமாணம் 128(1)(ஏ) இன் பிரகாரம் சிக்கனம், செயற்திறன், முறையான தன்மை மற்றும் நேர்மை தொடர்பாக கவனத்திற் கொள்ளாமல் பர்பொரேட்டின் கோம்ப் இயந்திரம் மதிப்பீட்டுப் பெறுமதியில் 200 சதவீதம் அதாவது ரூபா 4,500,000 தொகையினை விஞ்சிய பெறுமதியில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

## 3.8 வங்கிக் கணக்குகளைச் செயற்படுத்துவதிலுள்ள குறைபாடுகள்

**சீராக்கப்பட வேண்டிய மீதிகள்**

| | சீராக்கல் தொடர்பான விபரம் | காலப்பகுப்பாய்வு 6 மாதங்களுக்கு மேற்பட்டதும் 1 ஆண்டிற்குக் குறைவானதும் | 1 ஆண்டிற்கு மேற்பட்டதும் 3 ஆண்டுகளுக்குக் குறைவானதும் | 3 ஆண்டுகளுக்கு மேற்பட்டது | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | தேறாத வைப்புக்கள் | - | - | 14,944 | 14,944 |
| (ii) | வழங்கப்பட்டு, கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாதிருக்கும் காசோலைகள் | 13,158 | 15,156 | 1,072,783 | 1,101,097 |
| (iii) | இனங்காணப்படாத வரவுகள் | - | 18,950 | 262,162 | 281,112 |
| (iv) | இனங்காணப்படாத செலவுகள் | - | 15,385 | 400 | 15,785 |

காசேட்டில் உள்ளடக்கப்படாத ரூபா 548,888 தொகையான தவறான பெறுவனவுகள் தேறாத பெறுவனவாக வங்கி இணக்கக்கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

## 3.9 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

2012 ஆம் ஆண்டின் தெயட்ட கிருல கண்காட்சிக்காக அரசாங்க அச்சிடல் திணைக்களம் ரூபா 2,214,358 தொகையைச் செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிக்கப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கிரய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படாமல் உரிய செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) கண்காட்சிக் கொட்டிலைத் தயாரித்தல், அலங்கரித்தல் மற்றும் தேவையான பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 836,563 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் தேவையான பொருட்கள் மற்றும் அவற்றின் அளவுகள் மதிப்பீடு செய்யப்படாமையின் காரணமாக ஆகக் குறைந்த கிரயத்தின் கீழ் மிகவும் வினைத்திறனானதைத் தெரிவு செய்யக்கூடிய வகையில் கூறுவிலைகள் கோரப்பட்டிருக்கவில்லை.

(இ) போக்குவரத்து மற்றும் உபசரிப்புச் செலவினமாக மீளளிப்புச் செய்யப்பட்ட ரூபா 19,100 தொகைக்காக பற்றுச்சீட்டுக்கள் அல்லது உரிய ஊழியரிடமிருந்து பணம் பெறப்பட்டமைக்கான சான்றுகள் இணைக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.10 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றதாக இருந்தன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சந்தர்ப்பங்களில் சில கீழே காண்பிக்கப்படுகின்றன.

### அரசாங்க கொள்வனவு வழிகாட்டியின் நடைமுறைகளைப் பின்பற்றாமை

அரசாங்க அச்சிடல் திணைக்களத்தின் போசன சாலைக்காக ரூபா 591,304 பெறுமதியான உபகரணங்களைக் கொள்வனவு செய்யும் போது அரசாங்கக் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 7.7.1 வழிகாட்டியின் பிரகாரம் ஆகக் குறைந்த கேள்வி புறக் கணிக்கப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டமையின் காரணமாக ரூபா 62,101 தொகையான மேலதிகச் செலவினம் திணைக்களத்தினால் செலவு செய்யப்பட்டிருந்தது.

## 3.11 முகாமைத்துவ பலவீனங்கள்

### (அ) திணைக்களத்தின் நுளைவாயிலை நிர்மாணித்தல்

திணைக்களத்தின் நுளைவாயிலை நிர்மாணிப்பதற்காக ரூபா 1,620,748 தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

தனியார் நிர்மாணிப்பாளர் நுளைவாயிலை நிர்மாணிப்பதற்காக ரூபா 900,000 தொகைக்கு இணங்கியிருந்த போதிலும் திணைக்களத்தினால் அச் செயற்பாடுகள் ரூபா 1,620,748 தொகை செலவிடப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டமையினால் ரூபா 720,748 தொகையான மேலதிகமாகச் செலவிட வேண்டியேற்பட்டிருந்தது. அவ்வாறே திணைக்களத்தில் நிர்மாணம் தொடர்பாக மேற்பார்வை செய்வதற்கு தணகலை பெற்ற உத்தியோகத்தர் காணப்படாமையின் காரணமாக உரிய நிர்மாணங்கள் நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத்தின் (ICTAD) வழிகாட்டிகளுக்கு முரணாக நிறைவேற்றப்பட்டிருந்தது.

### (ஆ) திணைக்களத்தின் கட்டிடங்களைப் பராமரித்தலும் நிர்மாணித்தலும்

2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளின் போது திணைக்களத்தின் கட்டிடங்களைப் பராமரித்தல் மற்றும் நிர்மணங்களுக்காக ரூபா 25,436,419 தொகை செலவிடப்பட்டிருந்தது. அது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.7 வழிகாட்டிக்கு முரணாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(ii) பராமரிப்பு மற்றும் நிர்மாணங்கள் தொடர்பான வேலைப்பத்திரங்கள் தயாரிக்கப்பட்டிராததுடன் ஒவ்வொரு வேலை தொடர்பாகத் தயாரிக்கப்பட்ட அண்ணளவான மதிப்பீடு ஏற்றுக்கொள்ளப்பட்ட கட்டிட வீதம் அடிப்படையாகக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) பராமரிப்பு மற்றும் நிர்மாண வேலைகள் தொடர்பாக கொள்வனவு செய்யப்பட்டு எஞ்சுகின்ற பொருட்கள் தொடர்பான விபரங்கள்

காணப்படாதிருந்ததுடன் அப்பொருட்கள் அங்கீகாரமின்றி ஏனைய செயற்பாடுகளில் பயன்படுத்தப்பட்டிருந்தன.

(iv) அங்கீகரிக்கப்பட்ட அண்ணளவான மதிப்பீட்டை விஞ்சி பராமரிப்பு மற்றும் நிர்மாணச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் மேலதிக வேலைக்காக அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(v) கட்டிட மதிப்பீட்டைத் தயாரித்தல் மற்றும் நிர்மாணப் பராமரிப்பிற்காக அந்த விடயங்கள் தொடர்பான தகைமையுடைய தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் திணைக்களத்தில் காணப்படவில்லை.

## 3.13 மனிதவள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேட்ட நிலை | 36 | 16 | 20 |
| (ii) | மூன்றாம் நிலை | 08 | 03 | 05 |
| (iii) | இரண்டாம் நிலை | 1221 | 772 | 449 |
| (iv) | ஆரம்ப நிலை | 674 | 505 | 169 |
| | மொத்தம் | 1939 | 1296 | 643 |

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

மீளாய்வாண்டின் இறுதியிளவில் 643 வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) ஆட்சேர்ப்பு நடைமுறைகளுடன் இணங்காமை**

2012 மே 17 ஆந் திகதிய டீஎம்எஸ்/சீ/08/45 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் கடிதத்தின் பிரகாரம் பாராளுமன்ற இணைப்பு உத்தியோகத்தர் பதவி அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.